12.09.2024

O.S.No.221/2016

**பி**.வா.சா.1.திரு.ராஜசேகரன் த.பெ.வேதராஜ்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**வாதி தரப்பு குறுக்கு** விசாரணை

1.ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.3/2017 வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளது சரியானவை என்றால் சரியானவைதான். தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். தாவாசொத்திற்கு கிழக்கே யாருடையது சொத்து உள்ளது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, வடக்கே கிருஷ்ணன் புஞ்சையும், மேற்கே ரோடும், தெற்கே சினிப்பிரியா, மினிப்பிரியா திரையங்க உரிமையாளர்களின் இடமும் உள்ளது. பி.வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தில் சொத்து விவரத்தில் வீடு இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் அவ்வாறு வீடு இருப்பதாக சொல்லப்படும் வீட்டிற்கான மின் இணைப்பு எண்ணோ, வரிவிதிப்பு ரசிது எண்ணோ, கதவு எண்ணோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் அதில் கண்டுள்ள சொத்தினை தவிர இதர சொத்துக்களை பொறுத்து அந்தோணி யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் உயில் எழுதி வைத்துள்ளார் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான், அவர் எனது மனைவிக்கு எழுதி வைத்த பி.வா.சா.ஆ-1 உயிலைத் தவிர வேறு யாருக்கும் அவரது சொத்துக்களை பொறுத்து உயில் எழுதி வைக்கவில்லை.

2. அந்தோணி என்பவருக்கு நேரடி வாரிசுகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். எனது மனைவி அமலியை வளர்ப்பு மகளாக அவர் வளர்த்து வந்தார். எனது மனைவி மேற்படி அந்தோணியின் உடன்பிறந்த சகோதரியின் பேத்தி ஆவார், அந்த முறையில் அவரை சிறுவயதில் இருந்தே வளர்த்து வந்தார். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அந்தோணியின் இதர சொத்துக்களை பொறுத்து இது வரையில் எனது மனைவி வாரிசு என கோரி எந்த உரிமையும் கோரவில்லை என்றாலும், சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் ஒரு வீடு இருப்பதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வீட்டின் கதவு எண் என்ன என்றால் 8/118 ஆகும். ஆனால் பி.வா.சா.ஆ-4 ஆவணத்தில் காணப்படும் குடும்ப அட்டையில் எங்கள் வீட்டு கதவு எண்.8/1C என காணப்படுகிறது என்றால் சரிதான், அந்த வீடு கதவு எண்.8/118 வீட்டிற்கு தென்புறம் உள்ளது, அதில் அந்தோணி பாதிரியார் மற்றும் நான், எனது மனைவி ஆகியோர்கள் குடியிருந்து வந்த வீடு ஆகும். கதவு எண்.8/118 ஐ பொறுத்த வரை எங்களது பெயரில்குடும்ப அட்டையோ, ஆதார் கார்டோ கிடையாது என்றால் சரிதான்.

3. கதவு எண்.8/118 வீடு நாங்கள் பயன்படுத்த வில்லை, அது முழுமை பெறாத வீடு ஆகும், காவலாளி மட்டும் வைத்திருந்தோம். அதில் நாங்கள் ஹாலோபிளாக் கம்பெனி வைத்திருந்தோம். அவ்வாறு மேற்படி சொத்தில் ஹாலோபிளாக் கம்பெனி வைத்து நடத்துவதாக நான் தாக்கல் செய்துள்ள அசல் வழகது எண்.3/17 வழக்கில் சொல்லி உள்ளேன். இந்த வழக்கின் எனது தரப்பு எதிர்

வழக்குரையிலும் சொல்லி உள்ளேன். எனது மனைவி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.17/2007 வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி ஜேசுராஜ் என்ற அன்பரசன் ஆஜர் ஆகி வழக்கு நடத்தினாரா என்றால் அவர் ஆஜர் ஆகி வழக்கு நடத்தவில்லை, ஆனால் ஜேசுராஜ் என்ற அன்பரசன் மற்றும் இந்த வழக்கின் வாதி ஆகியோர்கள் என்னை அழைத்து ரூபாய்.8,00,000/- தருவதாக சமாதானம் பேசினார்கள். எப்போது அவ்வாறு அழைத்து பேசினார்கள் என்றால் ஜகுபருக்கும், அன்பரசனுக்கும் வழக்கு நடைபெற்ற போது என்னை அழைத்து பேசினார்கள். எந்த ஆண்டு பேசினார்கள் என்றால் சுமார் 2008ம் ஆண்டு பேசினார்கள். அவ்வாறு என்னை அழைத்து பேசவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் வீடியோ ஆதாரம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். அதே போல் வாதியும் என்னை அழைத்து, அவரது பெயருக்கு கிரையம் பதியும் முன்பு என்னை அழைத்து பேசினார். அந்த ஆதாரத்தினையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

4. எனது மனைவி தாக்கல் செய்ததாக சொல்லப்படும் அசல் வழக்கு எண்.17/2007 வழக்கில் சொத்து விவரத்தில் தாவா சொத்தில் வீடு இருந்ததாக சொல்லப்படும் வீட்டினை காட்டவில்லை என்றால் சரிதான். எனக்கு உயில்படி பாத்தியப்பட்டதாக சொல்லப்படும் சொத்தின் அப்போதைய சர்வே எண்.385/1B2B அது உட்பிரிவு செய்யப்பட்ட போது சர்வே எண்.385/4 ஆக தற்போது உள்ளது. மேற்படி உயிலிலும் எனது மனைவி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.17/2007லிலும் என்ன சர்வே எண் காட்டப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.385/1B2 என காட்டப்பட்டுள்ளது. அதே போல் எனது மனைவி எனக்கு எழுதிக்கொடுத்த பி.வா.சா.ஆ-13 செட்டில்மெண்ட் ஆவணத்திலும் சர்வே எண்.385/1B2B என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் நான்கு எல்லையில் மீதமுள்ள சொத்து அந்தோணிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு, தற்போது யார் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் ஜகுபருக்கும், அன்பரசனுக்கும் வழக்கு நடைபெற்ற போது எங்களுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பாமல் முன் இருந்த நிலையான அன்பரசன் பெயரில் மீண்டும் பட்டா ஏற்பட்டது. மேற்படி வழக்கு 2009ம் ஆண்டு முடிவுற்றது. 2009ம் ஆண்டிற்கு பின்னிட்டு தற்போது வரை மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்திற்கு எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். நான் ஆர்டிஓ கோர்ட்டில் பட்டா பெற முயற்சித்தேன், அதன் பேரில் 1ம் பிரதிவாதி, இந்த வாதி ஆகியோர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது, ஆனால் விசாரணைக்கு அவர்கள் யாரும் ஆஜராகவில்லை, நானும் அந்த வழக்கினை உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் விட்டு விட்டேன். எனது மனைவிக்கு எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில்படி எங்களுக்கு பாத்தியப்பட்டடதாக சொல்லப்படும் 1 ஏக்கரின் மின் இணைப்பு எண் என்ன என்றால் 436 ஆகும். கடைசியாக எப்போது மின் கட்டணம் செலுத்தினோம் என்றால் சரியாக ஞாபகம்இல்லை.

6. 100 யூனிட் மின்சாரம் இலவசமாக அறிவிக்க பின்பு நாங்கள் மின் கட்டணம் செலுத்தவில்லை. 100 யூனிட்டுக்குள்ளே மின்சார பயன்பாடு இருந்தது, ஆகையால் மின் கட்டணம் செலுத்தவேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. தற்போது அந்த மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பு வரை என் பெயரில் இருந்தது, தற்போது வாதி பெயரில் மாற்றி உள்ளார். அதே போல் வீட்டு வரி ரசிதினையும் அவர் மாற்றி உள்ளார். அவ்வாறு பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பு பஞ்சாயத்து அலுவலத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு வந்தது, அதை நான் இனிமேல் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உள்ளேன். வீட்டுவரி ரசிது நான் கடைசியாக 2017ம் ஆண்டு வரை கட்டியுள்ளேன். நீதிமன்றத்தில் நான் 2010ம் ஆணடு வரை வீட்டுவரி ரசிது தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அதற்கு பின்னிட்டு காலங்களுக்கு வீட்டுவரி ரசிது தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் 2017ம் ஆண்டு வரை வீட்டுவரி ரசிது உள்ளது, தேவைப்பட்டால் தாக்கல் செய்வேன்.

7. மேற்படி வீட்டுவரி ரசிது அனைத்தும் கதவு எண்.8/118ல் கட்டுப்பட்டதாகும். எனது பெயரில் உள்ள ரேசன் கார்டில் காணப்படும் கதவு எண்.8/1Cக்கு வீட்டுவரி ரசிது எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் 7 ஆண்டுகளுக்கு நான் ரசிது கட்டியுள்ளேன். மின் இணைப்பு ரசிதும் கட்டியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ-5ல் என்ன கதவு எண் போடப்பட்டுள்ளது என்றால் அதில் கதவு எண் எதுவும் இல்லை, வரிவிதிப்பு எண் மட்டும் தான் உள்ளது. கதவு எண் போடாமல் ஒரு வீட்டுவரி ரசிதினை எனது பெயரில் வாங்கி வைத்துக்கொண்டு மற்ற ரசிதுகள் எல்லாம் எனது கைபட கதவு எண் எழுதி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்பு எங்கள் சொத்தாக கட்சி செய்யும் 40 ஏர்ஸ் இடத்தினை பொறுத்து எங்கள் அனுபவத்திற்கு நாங்கள் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் தற்போது வரை நாங்கள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறோம். எனது மனைவிக்கு எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்து எங்கள் அனுபவத்தில் ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், அந்த சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்றாலும், தற்போது வரை அந்த சொத்து வாதியின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. எங்கள் தரப்பில் நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக எங்களால் போலியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)